பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 25 சனிக்கிழமை 11.12.2021 கதிர் 264

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆலயக் குருக்கள் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த ஆலயக் குருக்கள், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரக் குருக்களே (வயது - 70) உயிரிழந்துள்ளார். ☞2

## இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவருக்கு அமெரிக்கா தடை

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

சாவதேச மனித உரிமைகள் தினமான நேற்று போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகளை அமெரிக்க வெளியுறவுத்துறை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. ☞2

# தமிழ்க் கட்சித் தலைவர்கள் நாளை கொழும்பில் கூட்டம்

## ரெலோ முன்முயற்சியில் நடக்கிறது





(ந.லோகதயாளன்)

தமிழ் பேசும் சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்காகத் தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் முக்கிய கூட்டம் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் ☞2

## பாரதியாரின் பிறந்தநாள் இன்று; யாழில் சிலையும் திறந்துவைப்பு

(இ.கலையமுதன்)

இந்தியாவின் தேசிய கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 139ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று கொண்டாடப்பட்டது.

யாழ்., நல்லூர் அரசடி சந்தியில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மாலை அணிவித்து மலர் தூபி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், ☞2




### ஆளுநர் ஜீவன் தலைமையில்
## செவ்வாயன்று வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைதடியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் இந்தக் ☞2



## நிந்தவூர் பிரதேசத்திலும் வெடித்தது காஸ் அடுப்பு



அம்பாறை, நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட நிந்தவூர் முதலாம் கிராம சேவை பிரிவு மீராநகர் வீதியில் உள்ள வீடொன்றில் காஸ் அடுப்பு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ☞2

## முகமாலையில் மனித எச்சங்களும் ஆயுத தளபாடங்களும் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி மாவட்டம், பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடைய என நம்பப்படும் மனிதஎலும்புக்கூட்டுஎச்சங்கள், ஆயுத தளபாடங்கள் ☞2

## வல்லைப் பாலத்தடியில் விபத்து; சாரதி படுகாயம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் வீதி புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தான கப் ரக வாகனம் வல்லைப் பாலத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வல்லைப் பாலத்தில் இன்று இடம்பெற்ற குறித்த விபத்தில், சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட ☞2

## மன்னாரில் 144 பேருக்கு கொரோனா

மன்னாரில் கடந்த 10 நாள்களில் 144 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3,060 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மோட்டார் சைக்கிள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் ஆலயப் பூஜையை முடித்துக் கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய வேளை, எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குருக்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## இலங்கை இராணுவ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் விரிவுபடுத்தப்பட்ட தடைப் பட்டியலில் கொழும்பில் 2008 / 09 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும், லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி மற்றும் யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஆர்.எம்.சுனில் ரத்நாயக்க ஆகியோரே உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்குள் நுழைய தடை அமுலில் இருக்கும்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்காக அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்ட இலங்கைப் படைத் தரப்பைச் சேர்ந்த இரண்டாவது மற்றும் மூன்றாவது இவர்கள் ஆவர்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டது, அவரது கட்டளைப் பொறுப்பின் மூலம், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டது பற்றிய நம்பகமான தகவல்கள் காரணமாக எங்கள் வெளியுறவுக் கொள்கையின் மையத்தில் மனித உரிமைகளை வைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் எங்கு நடந்தாலும் அவற்றின் மீது கவனத்தை ஈர்க்கவும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் பொருத்தமான கருவிகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

கொழும்பில் 2008 / 09 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும், லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவில் விரிவுபடுத்தப்பட்ட தடைப்பட்டியலில் இலங்கை இராணுவத்தைச் சோந்த இருவர் உட்பட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பல்வேறு நாடுகளைச் சோந்த 15 பேர் மற்றும் 10 நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாரதியாரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் ஜெயசீலன், யாழ். தமிழ் சங்கத் தலைவர் லலீசன் உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்துகொண்டு மாலை அணிவித்து மலர் தூபி மரியாதை செலுத்தினர்.

அதேவேளை, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 139ஆவது பிறந்த நாளான இன்று யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையில் சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

இன்று காலை 10 மணியளவில் வட்டுக்கோட்டை குக் வீதி முதலாம் ஒழுங்கையில் யாழ். இந்திய நட்புறவுப் பேரவையின் தலைவர் சிதம்பரம் மோகனினால் நிர்மாணிக்கப்பட்ட சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவச் சிலையை மறவன்புலவு சச்சிதானந்தன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், இந்து சமய மதகுருமார்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## செவ்வாயன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் காலதாமதம் அடையும் நிலைமையில் இந்த ஏற்பாட்டை ஆளுநர் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

மேற்படி கூட்டம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு காரணமாக பிற்போடப்பட்டது.

## தமிழ்க் கட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங் கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல். எவ். தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி யின் என். ஸ்ரீகாந்தா உள்ளிட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தச் சந்திப்பில் பங்கேற்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளது.

## வல்லைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நிந்தவூர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு நாள்கள் கடந்த நிலையில், இந்தக் காஸ் அடுப்பு நேற்று வெடித்துள்ளது என வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தால் வீட்டில் இருந்த எவருக்கும் எவ்வித சேதங்களும் இடம்பெறவில்லை.

## மன்னாரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்ட கொரோனா நிலைவரம் தொடர்பாக அவர் இன்று விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னாரில் கடந்த 10 நாள்களில் 144 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3,060 கொரோனாத் தொற்றாளர்களும், தற்போது வரை 3,077 கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 2 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் மரணித்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இரண்டாவது நபர் மன்னார் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய பெண் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவருக்கு ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது - என்றுள்ளது.

## முகமாலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட்ட வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பொருள்கள் தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பளை பொலிஸாரால் கிளிநொச்சி நீதிமன்றின் கவனத்துக்குக் குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றத்தின் அனுமதியுடன் நாளை அகழ்வு நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்.பி.ஜி. உந்துகணை செலுத்தி உட்பட்ட வெடிபொருள்களும் விடுதலைப் புலிகளுடைய வரிச்சீருடை எச்சங்களும் மனித எலும்புக்கூட்டு எச்சங்களும் காணப்படுகின்றன.

இவற்றின் அடிப்படையில் குறித்த பொருள்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பல மாதங்களுக்கு முன்னர் இதே பகுதியில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளுடையது என நம்பப்படும் அடையாள எச்சங்களும் சீருடைகளும் மீட்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.








காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

நானும் சொல்கிறேனே.....!

- காலைக்கதிர் வார இதழின் நானும் சொல்கிறேனே என்னும் இந்தப் பகுதியில் நாங்கள் தரும் விடயத் தலைப்பினூடாக உங்களது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.
- சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு சிறப்புப் பரிசுகளுமுண்டு!



இந்த வாரத்துக்கான தலைப்பு

யாருக்கும் பொறுப்பில்லை!

உங்கள் எழுத்துக்களை எதிர்வரும் 15.12.2021 புதன்கிழமைக்கு முன்னர் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறையினூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்

நானும் சொல்கிறேனே.....!

காலைக்கதிர் வாரஇதழ்

Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna

மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com

Whatsapp & Viber - 076 443 8622

சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஒப்பந்தம் இரகசியமாம்!

இலங்கையில் அண்மைக் காலத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய அரசியல் பிரச்சினைகளில் ஒன்று கெரவலப்பிட்டிய யுகதனவி வலுசக்தி நிலையப் பங்குகளை காதோடு காதாக – சத்தம் சந்தடியின்றி – அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு மாற்றியமையாகும்.

அமைச்சரவையில் கூட உரிய முறையில் ஆராயப்படாமல் – ஆராயப்பட்டது என்பது போலக் கண்ணாமூச்சி காட்டி – இந்த விடயம் அங்கு அங்கீகரிக்கப்பட்டதாகப் பதிவும் செய்யப்பட்டது.

அதனால் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மொட்டுக் கட்சிக் கூட்டின் பங்காளிக் கட்சிகளே இவ்விடயத்தில் அரசுத் தலைமைக்கு எதிராக சீறிக்கொதிக்கும் நிலைமை.

இந்த விவகாரத்தில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு மாறாக நீதிமன்றத்தில், அமைச்சரவை முடிவை எதிர்த்து வாதாட அக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்தப் பின்புலத்தில், இந்த விவகாரத்தை ஒட்டி புதிய சர்ச்சையை – அதிர்ச்சியை – நாடாளுமன்றத்தில் கிளப்பி விட்டிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி.

மேற்படி யுகதனவி வலுசக்தி நிலையம் தொடர்பாக அமெரிக்க நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள், அதைக் கோருவதற்கும் பார்ப்பதற்கும் ஆராய்வதற்கும் நாடாளுமன்றத்துக்கு உரித்துண்டு என எதிர்க்கட்சிகள் வற்புறுத்தி வருகின்றன.

மேற்படி ஒப்பந்தத்தை நாடாளுமன்றுக்கு முன்வையுங்கள் என்று எதிரணிகள் வற்புறுத்திய போதும் அதற்குச் சரியான பதில் தராத அரசு அவ்விடயத்தில் தெளிவான, உருப்படியான கருத்தை வெளிப்படுத்தாமல் பம்மிக் கொண்டு, காலத்தை இழுத்தடித்து, ஏமாற்றி நின்றது.

இந்தச் சமயத்தில் இந்த அதிர்ச்சி தரும் அதிரடி நடவடிக்கையை ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்கா முன்னெடுத்தார்.

மேற்படி யுகதனவி விவகார ஒப்பந்தத்தின் பிரதி என்ற பெயரில் ஓர் ஆவணத்தை அவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்.

இலங்கை அரசும் அமெரிக்காவின் 'நியூபோட்ரஸ் எனர்ஜி' நிறுவனமும் மேற்படி யுகதனவி வலு உற்பத்தி மையம் தொடர்பில் செய்து கொண்ட ஒப்பந்தம் என்று தெரிவிக்கும் அந்த ஆவணத்தின் படி இந்த ஒப்பந்த வாசகங்களை, அதைச் செய்து கொண்ட இரு தரப்பினரும் மற்றையவரின் இணக்கமின்றி அடுத்த இரண்டு வருடங்களுக்கு வெளிப்படுத்தக் கூடாது; வெளிப்படுத்த முடியாது.

ஜே.வி.பி. தலைவர் சமர்ப்பித்தது மேற்படி ஒப்பந்தத்தின் உண்மையான பிரதி என்றால் இந்த ஒப்பந்தம் மிக மிக மோசமானது, ஜனநாயக விரோதமானதாகும்.

யுகதனவி வலு மையம் தனிப்பட்ட சொத்தல்ல. இலங்கை நாட்டின் பொதுச் சொத்து. அதை இயக்குவது, கையாள்வது, உரித்துக் கொண்டாடுவது தொடர்பில் நாடாளுமன்றுக்குக் கூட மறைத்து இரகசிய ஒப்பந்தம் செய்ய யாருக்கும் உரித்தோ உரிமையோ கிடையாது.

அத்துடன் இந்த இரகசிய ஒப்பந்தத்துக்குள் நாட்டுக்கான பேராபத்து புதைந்திருப்பதால்தான் அது பற்றிய விடயத்தை அம்பலப்படுத்தாமல் இரகசியம் பேணப்பட வேண்டும் என்ற ஏற்பாடு அதற்குள் புகுத்தப்பட்டிருக்கின்றது என ஜே.வி.பி. சுமத்திய குற்றச்சாட்டு சரியானதாகவும் நியாயமானதாகவும் தோன்றுகின்றது.

எது, எப்படி என்றாலும் விடயம் இப்போது உயர் நீதிமன்றுக்குச் சென்று விட்டமையால் – அங்கு அரசின் பங்காளிக் கட்சிகளே 'ஸேம் ஸைட் கோல்' அடிக்கவிருப்பதால் – நீதிமன்றின் மூலம் உண்மை வெளியாகும் என நம்பலாம்.



## காணாமற்போனோருக்கு நீதியை வழங்குங்கள்!

### வவுனியாவில் தீப்பந்த பேரணி

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினரால், தீப்பந்தம் ஏந்தி பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நேற்று (வெள்ளிக்கிழமை) காலை, வவுனியா– கந்தசாமி ஆலயத்தில் ஆரம்பமாகிய குறித்த பேரணி, மணிக்கூண்டுகோபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து கண்டி வீதி வழியாக பழைய பஸ் நிலையப் பகுதியை அடைந்து அங்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், 'வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்', 'நீதி கிடைக்கும் வரை போராடுவோம்', 'நீதியில்லாத நாட்டில் நீதிமன்றம் எதற்கு' போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தமையுடன், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வின் 58 ஆவது கதையாடல் நிகழ்வு நாளை (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் சந்திரிக்கா தர்மரட்ணம், 'கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாடகம்' என்னும் விடயப்பொருளில் கதையாடவுள்ளார். நிறைவுரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார். இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## பொது இடங்களுக்கு செல்ல தடுப்பூசி அட்டை கட்டாயம்!

### ஆக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி



பொது இடங்களுக்கு பிரவேசிப்பதற்கு தடுப்பூசி அட்டைகள் கட்டாயமாக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை செலுத்தி முடிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## பாகிஸ்தானில் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதவிகள்

பாகிஸ்தானின் சியால்கோட்டில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் வீட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரண்டாவது தடவையாக நேற்று (வெள்ளிக்கிழமை) விஜயம் செய்தார்.

பிரியந்தவின் இரண்டு பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக தலா 10 லட்சம் ரூபா வீதம் இரண்டு நிதி நன்கொடைகளை வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர், அவரது பிள்ளை ஒருவரின் கல்வி நடவடிக்கைக்காக மடிக்கணினி ஒன்றும் வழங்கினார்.

மறைந்த பிரியந்த குமாரவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைகளை ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து அவதானித்து வருவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், முற்றிலும் நியாயமான விசாரணையின் மூலம் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த பாகிஸ்தான் அரசு பாடுபடும் எனத் தான் நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

பிரியந்த குமாரவின் இரு பிள்ளைகளின் கல்வியை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவையான உதவிகள் தொடர்ந்தும் தன்னால் வழங்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உறுதியளித்தார்.

## பிரேஸிலில் 242பேரின் உயிரைக் காவு வாங்கிய

# இரவு விடுதி தீ விபத்து; நான்கு பேருக்குச் சிறை



பிரேஸிலில் கடந்த 2013ஆம் ஆண்டு, 242பேரின் உயிரை காவு வாங்கிய இரவு விடுதி தீ விபத்து சம்பவம் தொடர்பாக, நான்கு பேருக்கு நீண்டகால சிறைத்தண்டனையை பிரேஸில் நீதிமன்றம் விதித்துள்ளது.

இரவு விடுதியின் இரண்டு உரிமையாளர்கள் மற்றும் இரண்டு இசைக்குழு உறுப்பினர்கள் கொலை மற்றும் கொலை முயற்சியில் குற்றவாளிகள் என கண்டறியப்பட்டுள்ளனர்.

இரவு விடுதி உரிமையாளர்களான எலி சாண்ட்ரோ ஸ்போர் மற்றும் மவுரோ ஹாப்மேன் ஆகியோருக்கு முறையே 22 மற்றும் 19ஆண்டுகள்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது.

இசைக்குழு உறுப்பினர்களான மார்செலோ டி ஜீசஸ் டு சாண்டோஸ் மற்றும் லூசியானோ பொனில்ஹா லியோ ஆகியோருக்கு தலா 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இருப்பினும், நான்கு பேரும் உடனடியாக விடுவிக்கப்பட்டனர் மற்றும் அவர்களின் வழக்கறிஞர்கள் மேல்முறையீடு செய்யும் வரை அவர்கள் சுதந்திரமாக இருப்பார்கள்.

விசாரணையில் 14 உயிர் பிழைத்தவர்களிடமும் மற்ற 19 சாட்சிகளிடமும் சாட்சியங்கள் கேட் கப்பட்டன. பிரேஸிலின் மிக மோசமான தீவிபத்துகளில் ஒன்றான இந்த பேரழிவு, நாடு முழுவதும் உள்ள இரவு விடுதிகள் மற்றும் அதுபோன்ற இடங்களில் பாதுகாப்பு விதிமுறைகளை மதிப்பாய்வு செய்ய வழிவகுத்தது.

தெற்கு நகரமான சாண்டா மரியாவில் உள்ளகிஸ் இரவுவிடுதியில் ஒரு இசைக்குழுவின் உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளை நடத்தியபோது தீப்பிடித்தது.

நெரிசல் மற்றும் கடும் புகையினால் 242பேர் உயிரிழந்தனர். 600க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பல்கலைக்கழக விருந்தின் போது ஏற்பட்ட தீ விபத்தின் போது உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் 17 முதல் 30 வயதுக்குட்பட்ட மாணவர்கள்.

பொலிஸ் விசாரணையில், குரிசாடா பாண்டாங்குவேரா இசைக்குழுவினர் மேடையில் ஏற்றிய தீப்பொறியின் தீப்பொறிகள் இரவு விடுதியில் உள்ள இன்சுலேன் பொருள்களைப் பற்றவைத்து நச்சுப் புகையை உருவாக்கியது.

அத்துடன், அந்த இடத்தில் செயற்படும் தீயணைப்பான்கள் மற்றும் மோசமான அவசரகால அடையாளங்கள் இல்லை. இரண்டு அவசர வழிகள் மட்டுமே இருந்தமையை அதிகாரிகள் கண்டறிந்தனர். நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி மற்றும் பிற ஊடக தளங்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டு, பரவலான மக்களின் கவனத்தை ஈர்த்தது.

# குழந்தைகள் முன்னேற்றத்தில் கொரோனாவால் பின்னடைவு

## யுனிசெவ் கூறுகின்றது




குழந்தைகள் முன்னேற்றத்தில் கொரோனா கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத பின்னடைவை ஏற்படுத் தியுள்ளதாக யுனிசெவ் தெரிவித்துள்ளது.

குழந்தைகளில் கல்வி மேம்பாடு, வறுமை ஒழிப்பு, சுகாதாரம் ஆகியவற்றில் கொரோனாவால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. யுனிசெவ் நிர்வாக இயக்குநர் ஹென்ரீட்டா கூறியதாவது:

யுனிசெவ்பின் 75ஆண்டுகால வரலாற்றில் கொரோனா பெருந்தொற்று காலம் குழந்தைகளின் வளர்ச்சியில்பெரும்பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பட்டினியால் வாடும் குழந்தைகள், பள்ளிகளில் இடைநிற்றலான குழந்தைகள், வறுமையில் வாடும் குழந்தைகள், திருமணத்தில் தள்ளப்பட்ட குழந்தைகள், சரியான சுகாதார வசதிகள் கிடைக்காத குழந்தைகள் என எண்ணற்ற இன்னல்களை குழந்தைகள் இந்த பெருந்தொற்று காலத்தில் சந்தித்து வருகின்றனர்.

உலகம் முழுவதும் 10 கோடி குழந்தைகள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர். 6 கோடி குழந்தைகள் ஏழ்மையான குடும்பச் சூழலில் சிக்கியுள்ளனர். 2.3 கோடி குழந்தைகள் அத்தியாவசியத் தடுப்பூசிகள் கிடைக் காமல் தவித்து வருகின்றனர்.

கொரோனாவுக்கு முன்னதாக உலகம் முழுவதும் 100 கோடி குழந்தைகள் கல்வி, சுகாதாரம், வீடு, ஊட்டச்சத்து, சுகாதாரம், குடிதண்ணீர் என ஏதேனும் ஒரு அடிப்படை வசதி இல்லாமல் தவித்து வந்தனர். இப்போது கொரோனாவுக்குப் பின்னர் இந்த எண்ணிக்கைஇன்னும்அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒமிக்ரோனை கட்டுப்படுத்த மூன்று தடுப்பூசிகள் முக்கியம்



கொரோனாத் தொற்றின் ஒமிக்ரோன் மாறுபாட்டை கட்டுப்படுத்துவதற்கு இரு கொரோனா தடுப்பூசிகள் மாத்திரம் போதாது என பிரித்தானிய விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பிரித்தானியாவில் ஒமிக்ரோன் மற்றும் டெல்டா வைரஸ் பகுப்பாய்வுகள், புதிய மாறுபாட்டை நிறுத்துவதில் தடுப்பூசிகள் குறைவான செயல்திறன் கொண்டவை என்பதைக் காட்டுகின்றன.


எவ்வாறாயினும் பூஸ்டர் தடுப்பூசி, சுமார் 75% பேருக்கு எவ்வித கொரோனா அறிகுறிகளும் வராமல் தடுக்கிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே ஒமிக்ரோன் மாறுபாட்டிற்கு எதிராக பாதுகாப்பாக இருக்க மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வது அவசியம் என பிரித்தானிய விஞ்ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

பிரித்தானியாவின் தற்போதைய நிலைமை குறித்து பிரித்தானிய இராஜாங்க செயலாளர் மைக்கேல் கோவ் கவலை வெளியிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் மேலும் 448 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் தற்போது வரை அடையாளம் காணப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 265 ஆக அதிகரித்துள்ளது.

# மெக்சிக்கோவில் கோர விபத்து; 53பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோவில் நெடுஞ்சாலையில் சரக்கு லொறி விபத்துக்குள்ளானதில், குறைந்தது 53பேர் உயிரிழந்துள்ளனர்.

சியாபாஸ் மாநில தலைநகரை நோக்கி செல்லும் நெடுஞ்சாலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்து சம்பவிக்கும்போது லொறியில் 107 பேர் இருந்ததாக கூறப்படுகின்றது. சியாபாஸ் மாநில சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைவர் லூயிஸ் மானுவல் மோரேனோ, காயமடைந்தவர்களில் சுமார் 21பேர் பலத்த காயங்களுடன் உள்ளூர் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றார். காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பெடரல் அட்டர்னி ஜெனரல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பாதிக்கப்பட்டவர்கள் நடைபாதை முழுவதும் மற்றும் டிரக்கின் சரக்கு பெட்டியின் உள்ளே சிதறிக் கிடப்பதைக் காட்டியது.

பாதிக்கப்பட்டவர்கள் மத்திய அமெரிக்காவில் இருந்து குடியேறியவர்கள் எனத் தோன்றினாலும், அவர்களது தேசிய இனம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. தப்பிப்பிழைத்தவர்களில் சிலர் தாங்கள் அண்டை நாடான குவாத்தமாலாவைச் சேர்ந்தவர்கள் என்று கூறினர் என மோரேனோ தெரிவித்தார்.

மத்திய அமெரிக்காவில் வறுமை மற்றும் வன்முறையின் காரணமாக புலம்பெயர்ந்தோர் பொதுவாக அமெரிக்க எல்லையை அடைய மெக்சிக்கோ வழியாக நடைபயணம் மேற்கொள்கின்றனர், மேலும் சில சமயங்களில் மிகவும் ஆபத்தான முறையில் கடத்தல்காரர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பெரிய லொறிகளில் ஏறுகின்றனர். அவர்கள் இவ்வாறு பயணம் மேற்கொள்ளும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சியாபாஸ்மாநிலத்தில்உள்ளடக்ஸ்ட்லா குட்டிரெஸ் நகருக்கு வெளியே அருகே உள்ள ஆபத்தான வளைவினை கடக்கும் போது இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இராணுவ ஹெலிக்கொப்டர் விபத்து தொடர்பாக வதந்தி பரப்பினால் கடும் நடவடிக்கை



இந்திய இராணுவ ஹெலிக்கொப்டர் விபத்து தொடர்பாக வதந்திகளைப் பரப்பினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீலகிரியில் நடந்த ஹெலிக்கொப்டர் விபத்துத் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பல்வேறு வதந்திச் செய்திகளைச் சிலர் பரப்பு கின்றனர் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவ்வாறு சமூக வலைதளங்களிலும் ஏனைய வழிகளிலும் பொய்யான தகவல்களைப் பரப்புவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். வதந்திகளைப் பரப்புவோர் யார் என்பதை சைபர் க்ரைம் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர், என பொலிஸ் எச்சரித்துள்ளது.

முன்னதாக இந்திய விமானப்படைத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், இறந்தவர்களின் கண்ணியத்தைக் காக்க, விபத்துத் தொடர்பான யூகங்கள் பரப்புவதை அனைவரும் தவிர்க்கவும். விபத்துத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. விரைவில் உண்மை வெளிவரும் என்று கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நடைபெறுகின்ற விழாக்களில்

## தமிழ்த்தாய் வாழ்த்தினை பயிற்சி பெற்றவர் பாடவேண்டும்

அரசுவிழாக்களில்தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் ஆகியவை பதிவு செய்யப்பட்ட கருவிகளுக்குப் பதிலாக பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு பாட வேண்டும் என தமிழ்நாடு அரசு சார்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சமீபகாலமாக அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் ஆகியவை பதிவு செய்யப்பட்ட கருவிகள் வாயிலாக இசைக்கப்படுவதாகவும் இதனால் விழாவில் பங்கேற்போர் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கும்போது உதட்டளவில் கூட பாடுவதில்லை எனவும் தமிழக அரசின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், எந்தவிததேசப்பற்றோ அல்லது தமிழ் உணர்வோ இல்லாமல் இயந்திரகதியில் எழுந்து நிற்பதாகவும் எந்த நோக்கத்திற்காகத் தமிழ்த்தாய் வாழ்த்து, தேசிய கீதம் இசைக்கப்படுகிறதோ அந்த நோக்கம் சிதைந்து போவதாக அறியப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில், பதிவு செய்யப்பட்ட தேசிய கீதத்திற்குப் பதிலாக விழாவை நடத்துவோர் இதற்கெனப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதத்தை பாடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்படுவதாகவும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள உத்தரவுக் குறிப்பின் மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் நடவடிக்கையின் போது விவசாயிகள் உயிரிழக்கவில்லை

## இந்திய மத்திய வேளாண் துறை அமைச்சர் எழுத்துமூலம் பதில்



விவசாயிகள் போராட்டத்தின்போது பொலிஸ் நடவடிக்கையில் எந்த விவசாயிகளும் உயிரிழக்கவில்லை என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதிய வேளாண் சட்டங்களை ரத்து செய்யக் கோரி டெல்லி எல்லையில் ஓராண்டாக விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து வேளாண் சட்டங்களை ரத்து செய்கிறேன் என இந்தியப் பிரதமர் மோடி அறிவித்தார்.

கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற இந்திய நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் அமர்வில் புதிய வேளாண் சட்டங்களை ரத்துச் செய்வதற்கான பிரேரணை நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்ததையடுத்து, புதிய வேளாண் சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

இந்நிலையில், டெல்லி எல்லையில் நடைபெற்ற போராட்டங்களில் உயிரிழந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக எதிர்க்கட்சிகளால் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்த இந்திய மத்திய வேளாண் துறையமைச்சர் நரேந்திரசிங் தோமர், விவசாயிகள் போராட்டத்தில் பொலிஸ் நடவடிக்கையில் எந்த விவசாயிகளும் உயிரிழக்கவில்லை என்றும், பிற காரணங்களால் போராட்ட களத்தில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்தினருக்கு இழப்பீடு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பிற சலுகைகள் வழங்குவது அந்தந்த மாநில அரசுகளின் முடிவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வேதா இல்லம் நீதிமன்ற உத்தரவுப்படி உரியோரிடம் ஒப்படைப்பு



போயஸ் தோட்டத்திலுள்ள வேதா நிலைய இல்லத்தை அரசுடைமையாக்கியது செல்லாது என்ற நீதிமன்ற உத்தரவைச் சுட்டிக்காட்டி, அந்த இல்லத்தின் சாவியை விரைந்து தங்களிடம் ஒப்படைக்குமாறு மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் உறவினர்களான தீபக் மற்றும் ஜெ.தீபா இருவரும் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர். இவர்களின் கோரிக்கைக்கு, அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆலோசித்து முடிவெடுப்பதாக சென்னை மாவட்ட ஆட்சியர் பதில் அளித்திருந்தார்.

இந்நிலையில், போயஸ் கார்டனிலுள்ள ஜெயலலிதா இல்லத்தின் சாவியை தீபா மற்றும் தீபக்கிடம் சென்னை மாவட்ட ஆட்சியர் நேற்று ஒப்படைத்தார்.

இதுபற்றி சென்னை மாவட்ட ஆட்சியர் விஜயராணி, நீதிமன்ற உத்தரவின்படி வீட்டுச் சாவியைத் தம்மிடம் ஒப்படைக்கக் கேட்டு தீபா, தீபக் இருவரும் மனு செய்திருந்தனர். இது குறித்து அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று ஆலோசிக்கப்பட்டது. அதன்பேரில் போயஸ் இல்ல சாவி அவர்களிடம் வழங்கப்பட்டது, என்று தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் சிக்கியிருந்த மேலும் நூறு பேர் விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்துவரப்பட்டனர்



ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஆட்சி அதிகாரத்தைத் தலிபான்கள் கைப்பற்றியதையடுத்து ஆப்கானிஸ்தானில் அசாதாரண சூழல் நிலவி வருகிறது. இதனால், ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களை அந்தந்த நாட்டு அரசுகள் வெளியேற்றி வருகின்றன.

அந்தவகையில் இந்தியாவும், இந்திய உலகமன்றத்துடன்இணைந்து ஆப்கானிஸ்தானில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை ஒவ்வொரு தொகுதியாக விமானம் மூலம் அழைத்து வருகிறது. இதுவரை ஆப்கானிஸ்தா னில் இருந்து 565 இந்தியர்கள் டெல்லிக்கு அழைத்துவரப்பட்டனர் என இந்திய மத்திய அரசு மக்களவையில் சமீபத்தில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானிலிருந்து மேலும் 100 இந்தியர்கள் நேற்று விமானம் மூலம் டெல்லிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்த விமானத்தில் ஆப்கானிஸ்தானில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க குருத்வாராக்களில் இருந்து மூன்று சீக்கிய புனித நூல்கள், காபூலில் உள்ள அசாமி மந்திரில் இருந்து பண்டைய 5ஆம் நூற்றாண்டின் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பகவத்கீதை உள்ளிட்ட இந்து மத நூல்களும் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்திய மத்திய அரசால் வாடகைக்கு எடுக்கப்பட்ட சிறப்பு விமானம் மூலம் ஆப்கானில் பணியாற்றிவந்த இந்திய பிரஜைகள் மற்றும் அவர்களின் உறவுகள், இந்து மற்றும் சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த ஆப்கானிய குடிமக்கள் போன்றோர் இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆப்கானிஸ்தான் குடிமக்களுக்கு சோப்தி அறக்கட்டளை மூலம் மறுவாழ்வு அளிக்கப்படும், என்று இந்திய உலக மன்றத் தலைவர் புனீத் சிங் சந்தோக் தெரிவித்திருக்கிறார்.

# அம்பாறை – படிமலை அடிவாரத்தில் இரவோடு இரவாக புத்தர் சிலை



அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டியடி சங்கமன்கண்டி படிமலை அடிவாரத்தில் அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதி அருகில் இரவோடு இரவாக புத்தர் சிலை வைகைப்பட்டதால், மக்கள் பிரதிநிதிகள், பொது மக்கள் என அனைவரும் ஒன்றுதிரண்டு வீதியில் அமர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர் .

இவ் சம்பவத்தினைத் அடுத்து தாண்டியடி மற்றும் சங்கமன்கண்டி கிராம பொது மக்கள் அணிதிரண்டு புத்தர் சிலை வைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து புத்தர் சிலையை உடனடியாக அவ்விடத்தில் இருந்து அகற்றக் கூறியே வீதியில் ஒன்றுகூடினர்.

இதனை அறிந்து உடனடியாக திருக்கோவில் பொத்துவில் பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டு கலவரங்கள் ஏற்படாதவாறு பொலிஸார் தமது கடமை களை முன்னெடுத்தனர்.

இதனையறிந்து திருக்கோவில், பொத்துவில், காரைதீவு பிரதேச சபைகளில் தவிசாளர்கள், உதவி தவிசாளர், மற்றும் பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர் ஆகியோரும் சம்பவ இடத் திற்கு வருகைதந்து விசாரணைகளை முன் னெடுத்து இருந்தனர்.

இதேவேளை மக்கள் பிரதிநிதிகள் பௌத்த துறவியுடன் புத்தர் சிலையை அகற்றுமாறு தெரிவித்து கலந்துரையாடல் களில் ஈடுபட்டு இருந்தபோதும் பௌத்த துறவிகள் அவ் விடம் தமக்கு உரியது என தெரிவித்து பொது மக்களின் கோரிக்கையை மறுத்து இருந்தனர்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம பொது மக்கள் வீதியில் அமர்ந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன் பின்னர் இரண்டு நாள்களில் புத்தர் சிலை அகற் றப்படும் என பொலிஸார் வாக்குறுதிவழங்கியமையை அடுத்து மக்கள் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் வைத்தியசாலையில் இன்று வெடிப்புச் சம்பவம்



மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட் டக்களப்பு அரசடி பகுதியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் பயன்படுத்தப்படும் எரிவாயு அடுப்பு வெடித்து சாம்பலாகிய சம்பவம் ஒன்று இன்று பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெடிப்புச் சம்பவம் தொடர்பாக வைத்தி யசாலை உத்தியோகத்தர்களினால் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டதை தொடர்ந்து பொலிஸார் குறித்த சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்டனர்.

## வெல்லாவெளி – மண்டூர் பகுதியில் குடும்பஸ்தர் தூக்கிட்டு தற்கொலை

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் கணேசபுர பிரதேசத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தை நேற்று மாலை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இராஜரெத்தினம் சிங்கராசா (வயது - 42) என்பவரே தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் ஏற்பட்ட தகராறினால் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் வீட்டின் அறையினுள் தூக்கிட்டிருந்த நிலையில் அயலவர்களின் உதவியுடன் மீட்டெடுத்த போது குறித்த நபர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மாணவர்களை மகிழ்வூட்டும் நிகழ்வு

*கடந்த 23ஆம் திகதி கிண்ணியா குறிஞ்சாக்கேணிப் படகுப் பாதை விபத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மனநிலையைத் தேற்றுவித்தல் தொடர்பான உளவளத்துணை நிகழ்ச்சி, கிண்ணியா பிரதேச செயக சிறுவர் பிரிவு மற்றும் கலாசாரப் பிரிவு ஆகியன இணைந்து கிண்ணியா அல்அஸ்ஹர் வித்தியாலத்தில் நடைபெற்றது.*

*இந்த விபத்தில் குறித்த பாடசாலையில் கல்வி கற்ற நான்கு மாணவர்கள் உயிரிழந்துள்ளார்கள். மேலும் பாதிக்கப்பட்ட மாணவர்களும் இப்பாடசாலையினை சேர்ந்தவர்களே. இப் படகு விபத்தின் பின் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்த நிலையில், மாணவர்களை மகிழ்வூட்டும் செயற்பாடாக இந்த உளவளத் துணை செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டன.*

## இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் வேலுப்பிள்ளை தவராஜா காலமானார்



இலங்கை தமிழரசுக்கட்சியின் நீண்ட கால உறுப்பினரும் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினரும் தமிழ்தேசிய பற்றாள ருமான வேலுப்பிள்ளை தவராஜா இன்று அதிகாலை காலமானார் என அறிவிக்கப்பட் டுள்ளது.

மாரடைப்பு காரணமாக வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி தனது 68 ஆவது வயதில் காலமானார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஓய்வுபெற்ற கணித ஆசிரியராகயிருந்த இவர், இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆயுட்கால உறுப்பினராக செயற்பட்டு வந்தி ருந்தார். எழுத்தாளராகவும், இலக்கியவாதி யாகவும், ஊடகவியலாளராகவும், செயற் பட்டுவந்த இவர் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்சங்கத்தின் செயலாளராகவிருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும்பங் காற்றியிருந்தார்.

மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பின ராக தெரிவுசெய்யப்பட்ட காலம் தொடக்கம் தமிழ் மொழி அமுலாக்கலின் அவசியத் தினை தொடர்ச்சியாக வலியுறுத்திவந்த அவர், மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தூய தமிழுக்கு முன்னுரிமை யளிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தி னைக் கொண்டுவந்து அதற்குரிய நடவடிக் கையினையும் முன்னெடுத்திருந்தார்.

முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வலது கையாக செயற்பட்டமையுடன் அவரது மறைவுக்கு பின்னர் அவர் வழியில் கொள் கைப்பற்றுடன் தனது அரசியல் பயணத் தினை இலங்கை தமிழரசுக்கட்சி ஊடாக முன்னெடுத்திருந்தார்.

நேற்று மட்டக்களப்பு மாநகரசபையின் வரவு - செலவுத் திட்டத்தினை வெற்றி பெறச்செய்ய பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன் வெற்றியின் பின்னர் பெரும் மகிழ்ச்சியிலிருந்தார் எனவும் மாந கரசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அன்னாரின் பூதவு டல்அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் மட்டக்களப்பு கல்வியங்காடு இந்து மயானத்தில் நல்லடக் கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது.



# ஆஷ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸ்திரேலியா

ஆஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில், 1-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த 8ஆம் திகதி பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமான இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 147 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் இழந்திருந்தது. அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி 425 ஓட்டங்களைக் குவித்தது. ட்ராவிஸ் ஹெட் 152 ஓட்டங் களையும் டேவிட் வோனர் 94, லபுசேன் 74 ஓட்டங்க ளையும் சேர்த்தனர். இங்கிலாந்து அணியின் ஒலி ரொபின்சனும் மார்க்வுட்டும் தலா 3 விக்கெட்டுக்களை யும் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 278 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, மூன்றாவது நாள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் ஜோ ரூட் 86 ஓட்டங்களுடனும் டேவிட் மாலன் 80 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

ஆஸ்திரேலியாவை விட 58 ஓட்டங்கள் பின்னி லையில் இங்கிலாந்து அணி நான்காவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தபோது ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சு அவர்களுக்குக் கடும் சவாலை வழங்கியது. அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட தனது இரண்டாவது இன்னிங்ஸில் 297 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணி ஆட்டமிழந்தது. ஜோ ரூட் 89, டேவிட் மாலன் 82, ஜோஸ் பட்லர் 23 ஓட்டங்களை எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் நதன் லையொன் 4 விக்கெட்டுக்களையும், பட் கம்மின்ஸ், கமரொன் க்ரீன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

வெற்றிபெற 20 ஓட்டங்களே தேவையென்ற நிலையில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி ஒரு விக்கெட்டையிழந்து அந்த இலக்கை அடைந்தது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலிய அணியின் ட்ராவிஸ் ஹெட் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி அடிலெய்ட் நகரில் வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



## ஜப்னா கிங்ஸ் அணி 93 ஓட்டங்களால் வெற்றி

லங்கா பிறீமியர் லீக் தொடரின் நேற்றைய 9 ஆவது போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணி 93 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் நடப்பு சம்பியனான ஜப்னா கிங்ஸ்அணியும் கொழும்பு ஸ்டார்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன. மழை காரணமாக போட்டி ஆரம்பமாவதில் தாமதமேற்பட்டதால் இரு அணிகளுக்கும் தலா 2 ஓவர்கள் குறைக்கப்பட்டு, 18 ஓவர்கள் வழங்கப்பட்டன.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 18 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைக் குவித்தது. அணித்தலைவர் திசர பெரேரா ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களையும், சொஹைப் மலின் 44, அஷேன் பண்டார 42, கட்மோர் 40 ஓட்டங்களையும் எடுத்தனர். கொழும்பு அணியின் சீக்குகே பிரசன்ன 3 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொழும்பு கிங்ஸ் அணி 15.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டுமே பெற்று, 93 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஜப்னா கிங்ஸ் அணியின் மகேஷ் தீக்ஷன, வகாப் ரியாஸ் இருவரும் தலா 4 விக்கெட்டுக்களையும் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் சிறப்பாட்டக் காரராக திசர பெரேரா தெரிவானார்.

## பங்களாதேஷ் அணியின் சுழல் பந்துவீச்சு பயிற்சியாளராக ரங்கன ஹேரத் நியமனம்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணி யின் சுழல்பந்து வீச்சு ஆலோசகராக செயற்பட்டுவந்த இலங்கைக் கிரிக் கெட் அணியின் முன்னாள் வீரர் ரங்கன ஹேரத், அடுத்த இரண்டு வருடங்களுக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச் சுப் பயிற்சியாளராகச் செயற்படவுள் ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சுப் பயிற்சி யாளராக ரங்கன ஹேரத் செயற் படுவார் என்பதை அந்த நாட்டின் கிரிக்கெட் சபை வெளியிட்ட ஊடக அறிக்கை உறுதி செய்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சிம்பாப்வே சுற்றுப்பயணத்திலிருந்து அந்த அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக ரங்கன ஹேரத் செயற்பட்டுவந்திருந்தார். சிம்பாப்வேயுடனான தொடரினையடுத்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணி விளையாடியிருந்த நியூசிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான ரி-20 தொடர்களிலும் அதன் பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத்தொடரிலும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியுடனிணைந்து அவர் பணியாற் றியிருந்தார். பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் நியூசிலாந்துக்கான சுற்றுப்பயணத்திலிருந்து அணியின் சுழல்பந்துவீச்சுப் பயிற்சியாளராக தனது பணியினை ஹேரத் ஆரம்பிப்பார் எனக் கூறப்பட் டிருக்கின்றது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் வரலாற்றில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இடதுகை சுழல் பந்துவீச்சாளராக இருப்பதோடு, சுழல்பந்துப் பயிற்சியாளர்களுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் நிலை 3 க்கான பயிற்சி நெறியினையும் ரங்கன ஹேரத் பூர்த்தி செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## தம்புள்ள – கோல் போட்டி மழையினால் கைவிடப்பட்டது

தம்புள்ள ஜயண்ட்ஸ் மற்றும் கோல் கிளேடியேட்டர்ஸ் அணிகளுக்கிடையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற எல்.பி.எல். தொடரின் எட்டாவது லீக் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தம்புள்ள ஜயண்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அணித்தலைவர் தசுன் ஷானக 37 ஓட்டங்களையும், ரமேஷ் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களையும் பெற்றனர். கோல் கிளாடியேட்டர்ஸ் அணியின் நூர் அஹ்மட் மற்றும் நுவன் துஷார ஆகிய இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பின்னர் களமிறங்கித் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த டிய கோல் கிளாடியேட்டர்ஸ் அணி 1.2 ஓவர்களில் 18 ஓட்டங்களை அடித்து வேகமான ஆரம்பத்தைப் பெற்றிருந்த போது மழையின் குறுக்கீடு காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை பெய்த காரணத்தினாலும், இரண்டாவது போட்டியும் அங்கே நடைபெறவிருந்ததால் போதிய நேரமின்மை காரணமாகவும் போட்டி











# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் ஹிஷாலினிக்கு நீதிகோரி போராட்டம்

'சிறுவர் தொழில் மற்றும் சிறுவர்களை வீட்டுத் தொழிலுக்கு அமர்த்துவதை நிறுத்து' எனும் தொனிப்பொருளில் டயகமவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் வீட்டில் பணிப்புரிந்துகொண்டிருந்த 16 வயதுடைய ஹிஷாலினியின் மரண விசாரணை இதுவரை இழுபறியாக இருப்பதாகவும் இதற்கு உடனடியாகத் தீர்வு கோரியும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு, மக்கள் எதிர்நோக்கும், காணி, தொழிலாளர்களின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருள்களுக்கான விலைவாசி அதிகரிப்பு, கல்வி தொடர்பான பிரச்சினைகள், சிறுவர், பெண்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பதாதைகளை ஏந்தியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதில் அரசசார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட் அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பிரியந்த குமார படுகொலை விவகாரம்; இலங்கை மற்றும் பாக். ஆலோசனை

பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் குழுவொன்றினால் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தின் நிதிப் பாதுகாப்பு, இழப்பீடு தொடர்பான விடயங்கள் தொடர்பாக இலங்கையும் பாகிஸ்தானும் கலந்துரையாடியுள்ளன.



வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட்டை சந்தித்து நேற்று மேற்படி விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் நம்பிக்கையையும் எடுத்துரைத்த அமைச்சர், மறைந்த பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க பாகிஸ்தான் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என நம்புகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ா மஹ்மூத் குரேஷியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டமையை நினைவுகூர்ந்த அமைச்சர், அவர் தனது இரங்கலைத் தெரிவித்ததோடு, விசாரணையின் அனைத்து தகவல்களையும் விரைவில் இலங்கைக்கு வழங்குவேன் என உறுதியளித்தார் எனவும் கூறியுள்ளார்.

இந்த விசாரணையை தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுள்ள பாகிஸ்தான் பிரதமரின் தலையீட்டையும் வெளியுறவு அமைச்சர் பாராட்டினார். மேலும் சியால்கோட்டில் உள்ள வர்த்தக சமூகம் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் நன்கொடை மற்றும் பிரியந்த குமாரவின் மாத சம்பளத்தை அவரது மனைவிக்கு வழங்குவதாக அறிவித்தமையையும் அவர் வரவேற்றார்.

காலஞ்சென்ற பிரியந்த குமாரவின் இரண்டு பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாகவும், உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் குறித்தும் இலங்கை அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார். அந்தவகையில் எந்தவொரு இடையூறும் இல்லாமல் ஒவ்வொரு மாதமும், குறித்த சம்பளம் குடும்பத்திற்கு கிடைப்பதை உறுதி செய்வதற்கான வழிமுறையை ஏற்பாடு செய்யுமாறு பாகிஸ்தான் தூதரிடம் அவர் கேட்டுக் கொண்டார். இந்நிலையில், இந்தச் சம்பவத்துக்கு தனது மனமார்ந்த மன்னிப்புகளை தெரிவித்துக்கொண்ட பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், பாகிஸ்தான் அரசு முழு விசாரணைக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்குவதை உறுதி செய்வேன் எனவும் உறுதியளித்தார்.

பாகிஸ்தானில் வாழும் ஏனைய அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தொற்றிலிருந்து விடுபட மஹா கணபதி ஓமம்

### வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில்

கொவிட் தொற்றில் இருந்து விடுபட்டு மக்கள் நலன் பெற வேண்டி வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஓமம் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா, வைரவ புளியங்குளம் பகுதியில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஆதி விநாயகர் ஆலயத்தில் ஆலயத்தின் பிரதம குரு மயூர சர்மா குருக்கள் தலைமையில் மஹாகணபதி ஓமம் சிறப்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

பிள்ளையார் கதை விரதம் முடிவடைந்துள்ள நிலையில், ஆதி விநாயகப் பெருமானின் அடியார்களுக்கு நலன் வேண்டியும், கொவிட் தொற்றில் இருந்து இந்த நாடும், மாவட்டமும் விடுபட்டு மக்கள் நலன்பெறவும் மேள தாள வாத்தியங்கள் முழங்க, அந்தண சிவாச்சாரியார்கள் புடைசூழ மஹா கணபதி ஓமம் சிறப்பாக இடம் பெற்றது. இதில் ஆதி விநாயகப் பெருமானின் பக்த அடியார்கள் பலரும் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் அருட் கடாட்சங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன், பிள்ளையார் கதை நிறைவை முன்னிட்டு வியாழக்கிழமை மாலை கஜமுகா சூரன் போரும் ஆலய வீதியில் ஆலய பிரதம குரு மயூசர சர்மா குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றதுடன், பல்வேறு வேடங்களைப் பூண்டு வந்த கஜமுகா சூரனை விநாயகப் பெருமான் வதம் செய்யும் காட்சியை பக்த அடியார்கள் கண்டு களித்து விசேட வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2021இல் வெளியிடப்பெற்றது.